1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தண்டராம்பட்டு பஞ்சாயத்தைப் பொறுத்தவரை இந்தக் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் மட்டுமல்ல, அந்த பஞ்சாயத்துக்கு உட்பட்ட பிற ரெவின்யூ கிராமங்களில் கிராமத்திற்கு ஒரு கடை என்ற வகையில் வேறு கடைகளும் இந்தப் பணியை ஆற்றிக் கொண்டு வருகிற காரணத்தால் கற்பகம் கூட்டுறவு அங்காடி கிளை தேவையில்லை என்று கருதி மூடப்பட்டிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தண்டராம்பட்டு கிராமத்தில் மூடப்பட்ட கூட்டுறவு சிறப்பங்காடியில் ஷேர் திருப்பித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாகூர் தொகுதியில் மத்தூர் கிராமத்தில் ஷேர் கலெக்ஷன் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அப்படி சிறப்பங்காடி ஏற்படுத்தப்படவில்லை. பல தடவை மனுக்கள் போடப்பட்டும் ஷேர் இது வரை திருப்பித் தரப்படவில்லை. இதைப் பற்றி அரசுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : என்னிடத்தில் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அளித்த விவரத்தை அடிப்படையாகக் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

கூட்டுறவு நிறுவன ஊழியர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டம்.

*வினா எண் 663—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல நிதித் திட்டத்தினை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் விரிவு படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக மற்ற அரசு அலுவலர்கள் எல்லாம் பயன் பெறுகிறார்கள். இந்த அரசாங்கத்தினுடைய கூட்டுறவுத் துறையிலே பல்வேறு துறைகளிலே நிலவள வங்கிகளிலே, கூட்டுறவு மாவட்ட அளவிலே

உள்ள வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கி, தாலூகா அளவிலே உள்ள ஸ்தாபனங்கள் இவைகளிலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் இந்தத் திட்டம் தேவை என்று நீண்ட நாட்களாக அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நலத் திட்டத்தைப் போன்ற அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்றாலும், மத்தியஅரசுத் திட்டமாக ஊழியர் சேம வைப்பு நிதியுடன் கூடிய காப்புத் திட்டம், எம்ப்ளாயீஸ் பிராவிடென்ட் பண்ட் டெபாசிட் லிங்க் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்ற திட்டம் இன்றைக்கு அமலில் இருக்கிறது. அப்படி அது அமலில் இருக்கிற காரணத்தாலே இந்தத் திட்டத்தின் மூலமாக கூட்டுறவு நிறுவனங்களிலே பணியாற்றக் கூடியவர்கள் இன்றைய தினம் பயன்பெற்று வருகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே அரசு ஊழியர்களுக்கு மட்டுமல்ல, பள்ளி ஆசிரியர்களுக்கும், குடும்ப நலத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கூட்டுறவின் கீழே பல ஸ்தாபனங்களிலே பணியாற்றக்கூடியவர்களுக்கும் இந்தத் திட்டம் அமல் படுத்தாமல் இருப்பது ஒரு பாரபட்சம் இல்லையா ? அமைச்சர் அவர்கள் வேறு திட்டம் அவர்களுக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்திலே திடீரென்று இறந்து விட்டால் 10 ஆயிரம் ரூபாய் என்பது இல்லை என்று அறிகிறேன், திடீரென்று ஆபத்து ஏற்பட்டு விட்டால் அந்தக் குடும்பத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமென்ற முறையிலே கூட்டுறவுத் துறையிலே வேலை செய்யக் கூடியவர்களுக்கும் அவர்கள் வைத்திருக்கிற நியாயமான கோரிக்கை ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தை அவர்களுக்கும் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் நாங்களும் மத்திய அரசாங்கத்திற்கு அதனைப் பற்றிய அத்தனை உணர்வுகளையும் வேண்டுகோளாக விட்டோம். ஆனால் இந்தத் திட்டம் அமலில் இருப்பதால் குடும்ப நலத் திட்டத்தை அவர்கள் ஒப்புக் கொள்ள முடியாது என்று மறுதலித்து விட்ட காரணத்தால் அவர்கள் அதைப் பெற முடியவில்லை.

திரு. மு. அரங்கநாதன்: துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், நான் கூப்பிட்டால் தான் கேட்க வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள ஊழியர்களுக்கு எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். கூட்டுறவுத் துறையிலே உள்ள பல்வேறு வகையான ஊழியர்களும் அதை பெறுகின்ற வகையிலே மத்திய அரசாங்கத்திற்கு எழுதி நல்ல முடிவை ஏற்படுத்த இந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: ஏற்கெனவே நான் அவர்கள் மறுதலித்து விட்டார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தையே செம்மையாக நிறைவேற்ற மத்திய அரசுக்கு சொல்ல இந்த அரசு மேல் முயற்சிகளை எடுத்துக் கொள்ளும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஊழியர்களுக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற குடும்ப நலத் திட்டத்தை கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு அமல் படுத்த மத்திய சர்க்கார் மறுத்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இந்த சட்ட சபையிலேயே அதற்காகத் தீர்மானம் கொண்டு வந்து மத்திய அரசை வற்புறுத்துகின்ற நோக்கம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அரசுக்கு அப்படிபட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீதியுள்ள கேள்விகள் நாளை எடுத்துக் கொள்ளப் பெறும்.